**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**
**(01. 05. 2021 முதல் 05 05. 2021 )**

**அறிக்கைஎண் 035/2021** **தேதி. 30.04..2021**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

.

**ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

| **கடந்தவாரவானிலை (27..04 .2021 முதல் 29 04.2021)** | | | | **அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு - 05..05.2021- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **27/04** | **28/04** | **29/04** | **தேதி** | **நாள் -1 01/05** | **நாள் - 2 02/05** | **நாள் - 3 03/05** | **நாள் - 4 04/05** | **நாள் - 5 05/05** |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 0 | 4 | 1 | 1 |
| 35 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 37 | 36 | 36 |
| 25 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்நிலை (°செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| 7 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 78 | 81 | 77 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 53 | 45 | 50 | குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 10 | 11 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 180 | 180 | 200 | காற்று வீசும் திசை | 200 | 200 | 200 | 200 | 200 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (01. 05. 2021 முதல் 05 05 .2021 )**

வரும் நாட்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது.. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | மேற்கு மலைத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. நீர்பாசனத்தை தள்ளிப்போடவும் மற்றும் கோடை உழவு செய்யவும்.<br>கோடை மழையனை நிலத்தடியில் சேமிக்கவும், பயிர் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும், அறுவடை செய்த மற்றும் தரிசு நிலங்களை சரிவிற்கு குறுக்காக மண்ணை புரட்டும் கலப்பை கொண்டு உழவு செய்யவும். |
| **சோளம்** | விதைப்பு | இலேசானதூறல் மழையே எதிர்பார்க்கப்படுவதால், உழுத நிலங்களில் இறவை சோளம் விதைத்து தொடர்ந்து நீர் பாசனம் செய்யவும். |
| கம்பு | விதைப்பு **மற்றும் இளம் பருவம்** | இறவை கம்பு மற்றும் பாடுவாசி விதைப்பினை தொடரவும். விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி) விதைக்கவும். |
| எள் | காய் பிடிக்கும் பருவம் | தற்போது நிலவும் அதிக பகல்நேர மற்றும் இரவு நேர வெப்பநிலை காரணமாக பிப்ரவரி மாதம் 15 –ம் தேதி கோடையில் பயிர் செய்த இறவை எள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. இதனைக் கண்காணித்து 5 சதம் வேப்பம்கொட்டை வடிகரைசலை மாலைவேளையில் தெளிக்க வேண்டும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரிக்க வேண்டும்.<br>மழையின் காரணமாக கரும்பு பயிரில் இரும்பு சத்து குறைபாடு தென்படுகிறது. எனவே இதை நிவர்த்தி செய்ய மழை இல்லாத தருணங்களில் 1 சதவீதம் இரும்பு சல்பேட் கரைசலை 1 சதவீதம் யூரியா கரைசலுடன் சேர்த்து 15 நாட்கள் இடைவெளியில் குறைபாடு நிவர்த்தி ஆகும் வரை தெளிக்கவும்.<br>கடந்தவார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி பின் பருவ கரும்பு சாகுபடியை தொடர்ந்து மேற்கொள்ளலாம். மேலும் நடவுக்கு முன்பு கருணைகளை 0.1 சதவீதம் கார்பன்டசிம் கரைசலில் 15 நிமிடங்கள் ஊறவைத்து பின்பு நடவு செய்யவும். |
| காய்கறிகள் | வளர் பருவம். | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் காய்கறிகளில் சிலந்தி தாக்குதல் வர வாய்ப்புள்ளது. ஆதலால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் டைக்கோபால் 2.5 மிலி அல்லது நனையும் கந்தநகம் 3.5 கி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| வாழை | | கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>பரவலரக வாழையில் குருத்து அழுகல் நோய் காணப்படுகிறது. இதற்கு 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பீளீச்சிங் பவுடரை கலந்து மரத்தின் அருகே ஊற்றவேண்டும். இதை நோய் வருவதற்கு முன்பு செய்தால் நோய் வராமல் பாதுகாக்கலாம். |
| மா | காய் பிடிக்கும் பருவம் | தொடர்ந்து வறண்ட வானிலை நிலவுவதால் பிஞ்சு உதிர்வதை தடுக்க மாமரத்திற்கு நீர்ப்பாசனம் செய்யவும். |
| தென்னை | | தென்னை மரத்தின் பாத்திகளை களைக் கொத்து கொண்டு கிளறி விடுவதன் மூலம் மழை நீரை சேகரிக்கலாம்.<br>இலேசான தூறலே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | நடவு | நிலவும் வானிலையில் மஞ்சள் கிழங்கை நடவு செய்வதற்கு உழவு மேற்கொள்ளவும். ஒரு எக்டருக்கு 12.5 டன்கள் தொழு உரத்தை வயலில் இட்டு கடைசி உழவு மேற்கொள்ளவும். |
| காளன் | | வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதால் காளான் குடில்களில் வெப்பநிலையைக் குறைக்க கூடாரத்தின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம். |
| கால்நடைகள் | | அதிக வெப்பநிலை நிலவ வாய்ப்புள்ளதால், கால்நடைகளை பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டாம்.<br>அதிக வெப்பநிலை நிலவ வாய்ப்புள்ளதால், மழையில்லாத இடங்களில் கால்நடை மற்றும் கோழிக’குடில்களைச்சுற்றி நனைத்த சாக்கினை தொங்கவிடவும். |

**குறுஞ்செய்தி**

- இலேசானதூறல் மழையே எதிர்பார்க்கப்படுவதால், உழுத நிலங்களில் இறவை சோளம் விதைத்து தொடர்ந்து நீர் பாசனம் செய்யவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம்,**
**கோவை**